# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு அவர்களைப் பார்த்து, "மானிடமகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர். எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும்' என்றார். (யோவான் 20:22-25)

# திருத்தந்தையாக எட்டு ஆண்டுகள் நிறைவில் 'நானும் மியான்மார் தெருக்களில் மண்டியிடுகிறேன்"

## -திருத்தந்தை

**வத்திக்கான்**: மியான்மார் நாட்டிற்கு நம்பிக்கை தரும் எண்ணத்துடன், அங்கு போராடிவரும் பல இளையோர், தங்கள் உயிரை இழந்து வருகின்றனர் என்றும், ஒவ்வொரு நாளும் அங்கு நடைபெறும் வேதனைகள் நிறுத்தப்படவேண்டும் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மார்ச் 17, அன்று வழங்கிய மறைக்கல்வி உரையின் இறுதியில் மீண்டும் ஒருமுறை விண்ணப்பித்தார்.

### மியான்மார் நாட்டிற்காக மீண்டும் ஒரு விண்ணப்பம்

இராணுவம், மற்றும் காவல்துறையினர் முன்பாக சாலையில் மண்டியிட்டு, அருள் சகோதரி அன் நூ துவாங் அவர்கள் விண்ணப்பித்த நிகழ்வை நினைவுகூரும் வகையில், "'வன்முறையை நிறுத்துங்கள்' என்ற வேண்டுதலுடன், நானும், மியான்மார் தெருக்களில் மண்டியிடுகிறேன். 'உரையாடலை மேற்கொள்ளுங்கள்' என்று கூறி, என் இரு கரங்களையும் விரித்து வேண்டுகிறேன்" என்ற சொற்களுடன், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உணர்வுப்பூர்வமான விண்ணப்பத்தை விடுத்தார்.

இவ்வாண்டு பிப்ரவரி முதல் தேதியிலிருந்து மியான்மார் இராணுவம் அந்நாட்டின்மீது சுமத்தியுள்ள இராணுவ ஆட்சியை எதிர்த்து, மியான்மார் மக்கள், குறிப்பாக, இளையோர், அந்நாட்டில் மேற்கொண்டு வரும் போராட்டங்களில், இதுவரை, 150க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டுள்ளனர் என்று ஊடகங்கள் கூறுகின்றன.
இராணுவம் தன் அடக்குமுறை நிலைப்-பாட்டை விடுத்து, உரையாடலை




மேற்கொள்ள வேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், மியான்மார் ஆயர் பேரவையின் தலைவர், கர்தினால் சார்ல்ஸ் மாங் போ அவர்களும், தொடர்ந்து பலமுறை விண்ணப்பித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### திருஅவையின் தலைமைப் பணியில் எட்டு ஆண்டுகள்

தொடர்ந்து, கடந்த எட்டு ஆண்டுகளில் திருத்தந்தை பிரான்சிஸ் கத்தோலிக்கர் திருஅவையை நோக்கும் முறையை முழுவதுமாக மாற்றியுள்ளார். அவரது முதல் நற்செய்தியின் வார்த்தைகள் கோட்பாடுகள் பற்றியோ, சட்டங்கள் பற்றியோ அல்ல, மாறாக, அவை கடவுளின் பரிவன்பு, மற்றும், இரக்கம் பற்றியதாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நம் கிறிஸ்தவ நம்பிக்கையை எவ்வாறு புரிந்துகொள்கிறோம் என்பதைவிட, எவ்வாறு அதை வாழ்கிறோம் என்பதிலும், திருஅவையில் திறந்தமனதுடன் கலந்துரை-யாடல், மற்றும், விவாதங்கள் நடைபெறவும் ஊக்கப்படுத்தி வந்துள்ளா? எனும் கேள்வியை முன்வைக்கும் திருத்தந்தை , மியன்மார் மக்களின் நல்வாழ்வுக்காக தாமும் தெருவில் மண்டியிடுவாக அறிவித்தார்.

84 வயது நிரம்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2013-ம் ஆண்டு மார்ச் 13-ம் தேதி, கத்தோலிக்கத் திருஅவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், தென்அமெரிக்காவிலிருந்தும், இயேசு சபையிலிருந்தும் தேர்ந்-தெடுக்கப்பட்ட முதல் திருத்தந்தையாவார். ஜோர்ஜ் மரியோ பெர்கொக்லியோ (Jorge Mario Bergoglio) என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், 1936-ம் ஆண்டு, டிசம்பர் 17-ம் தேதி, அர்ஜென்டீனா நாட்டுத் தலைநகர் புவனோஸ் அய்ரஸ் நகரில் பிறந்தார்.

# 'திருமணமும் திருஅவை சட்டமும்' இயங்கலை வழி பயிலரங்கம் நடைபெற்றது

**பினாங்கு**: கடந்த 14-03-2021, ஞாயிறு அன்று, திருமணமும் திருஅவை சட்டமும் என்ற தலைப்பில் பயிலரங்கம் ஒன்று இயங்கலை வாயிலாக நடைபெற்றது. 'கனிதரும் சீடத்துவம்' எனும் பொதுநிலை பணிக்குழு Msgr. ஹென்றி ராஜூ அவர்களின் ஆலோசனையின் பேரில் ஏற்பாடு செய்த மேற்கண்ட பயிலரங்கில் தீபகற்ப மலேசியாவின் மூன்று மறைமாவட்டங்களைச் சேர்ந்த ஏறக்குறைய 100 பேர் கலந்து பயன்பெற்றனர். பினாங்கு மறைமாவட்டதின், கன்னி மரியாவின் பிறப்பு (Church of the Nativity of the B.V.Mary) பங்கின் பங்குத்தந்தையும் அம்மறை-மாவட்டத்தின் கத்தோலிக்கத் திருஅவை சட்டத்தொகுப்பின் ஆலோசகருமான அருள்தந்தை தோமினிக் சந்தியாகு அவர்கள் இப்பயிலரங்கத்தை வழிநடத்-தினார்.

தொடக்கத்தில், திருமணம் என்றால் என்ன?, திருஅவையில் திருமணம், திருமணத்திற்கான தகுதிகள் யாவை?, திருமணத்திற்கான தடைகள் என்ன?, திருமணத்தில் ஏற்படும் பிரச்சனைகள் போன்றவற்றைத் தொட்டு விளக்கமளித்த அருள்தந்தை, இக்கருத்தரங்கில் பங்கேற்றோர் எழுப்பிய பலதரப்பட்ட வினாக்களுக்கும் Msgr. ஹென்றி ராஜூ அவர்களுடன் இணைந்து பதிலளித்தார்.

கடவுள் தொடக்கத்திலேயே திருமணத்-திற்கு ஆசீர் வழங்கியுள்ளார் (தொநூ.1:27) என அருள்தந்தை தோமினிக் கூறினார். திருமணத்தில் ஓர் ஆணும் பெண்ணும் இணைய வேண்டும் என்பதே கடவுளின் திருவுளம். ஆணும் பெண்ணும் சம நிலையில் படைக்கப்பட்டவர்கள். இதற்கு மாறாக ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் திருமணம் செய்வது இயற்கைக்கும் கடவுளின் திட்டத்திற்கும் முரணனாது என அவர் விளக்கினார்.

ஆணும் பெண்ணும் திருமணத்தில் இணையும் போது கடவுளின் திட்டத்தில் வாழ்கின்றனர் என்றும், கடவுளின் திட்டத்தைச் செயல்படுத்துகின்றனர் என்பதையும் தெளிவுப்படுத்தினார். திருமணத்தின் வழியாக குழந்தைகளைக் கணவனும் மனைவியும் அன்பின் அடையாளமாகப் பெற்றெடுக்கும் போது,

**திருமணமும் திருஅவை சட்டமும்**



*சொற்பொழிவாற்றிய அருள்தந்தை தோமினிக் சந்தியாகு*

கடவுளோடுச் சேர்ந்து படைப்பில் உடனுழைப்பாளர்களாக மாறுகின்றனர் (தொ.நூ.1:28) என்பதை விரிவாக விளக்கினார். மேலும், திருஅவைச் சட்டம் 1055 (1)-ன் படி கத்தோலிக்கத் திருமணமானது ஓர் உடன்படிக்கை, அது ஒப்பந்தம் அல்ல என்பதையும் நினைவூட்டி-னார்.

தொடர்ந்து, 2-ம் வத்திக்கான் சங்கம், திருஅவை எனும் ஆவணத்தில் (Lumen Gentium) எண் 11-ல், 'கிறிஸ்தவ மணமக்கள் திருமணமென்னும் அருளடை-யாளத்தால் கிறிஸ்துவுக்கும் திருஅவைக்கும் இடையிலுள்ள இணைப்பு, வளமிக்க அன்பு ஆகிய மறைபொருள்களின் அடையாளமாக நின்று அதில் பங்கு கொள்கின்றனர் (எபெ 5:32) என்றும், இந்த அருளடையாளத்தால் தங்களது திருமண வாழ்விலும் பிள்ளைகளைப் பெற்றெடுப்பதிலும், வளர்த்து உருவாக்குவதிலும் தூய்மைநிலை அடைய ஒருவருக்கொருவர் உதவுகின்றனர்' என்பதையும் தெளிவாக விளக்கினார்.

-தொடர்ச்சி அடுத்தப் பக்கம்

# 'ஓசன்னா' என்பதன் பொருள் என்ன?

## ஜோவேனா ஹென்ரி, காஜாங்

நான்காம் ஆண்டு மறைக்கல்வி நூலில், 'ஓசன்னா' என்றால் மீட்புத் தாரும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், குருத்து ஞாயிறு அன்று, குருதோலை ஏந்தி, 'ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப் பெறுக' என்று வாழ்த்துகிறோம். இவ்விரண்டில் எது சரி?

ஜோவேனா ஹென்ரி, காஜாங்.

இயேசு, தமது இறுதி நாள்களில் எருசலேமுக்குள் வெற்றி பவனியாக வரும்போது மக்கள் 118-ம் திருப்பாடலை, குறிப்பாக இப்பாடலின் 25-26 வசனங்களான, **ஆண்டவரே! மீட்டருளும், ஆண்டவரே! வெற்றிதாரும்'** என்று பாடினர். இந்த திருப்பாடல், மீட்புக்கு நன்றி செலுத்தும் திருப்பாடல் என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. இப்பாடலில் 'ஓசன்னா' எனும் சொல் சிறப்பிடம் பெற்றுள்ளதை அறிகிறோம். 'Hosianhas' என்ற எபிரேயச் சொல் இறைவனைக் கூவி அழைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் புதிய ஏன்பாட்டில், இது ஒரு வாழ்த்தாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, மத். 21:9-ல், 'அவருக்கு முன்னேயும் பின்னேயும் சென்ற கூட்டத்தினர், "தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! உன்னதத்தில் ஓசன்னா!" என்று சொல்லி ஆர்ப்பரித்தனர்.' என்று மத்தேயு கூறுகிறார்.

'ஓசன்னா' எனும் சொல்லின் பொருளை ஆராயந்தோமானால், எபிரேய மொழியில், **'விடுதலை தாரும்' அல்லது வெற்றி தாரும்'** என்பது பொருள். இதன் அடிப்படையில் தான் நான்காம் ஆண்டு மறைக்கல்வி நூலில், 'ஓசன்னா' என்றால் மீட்புத் தாரும் என்று கூறப்பட்டுள்ளது. ஓசன்னா எனும் இச்சொல் ஒரு விடுதலை முழக்கமாகப் பயன்படுத்தப்பட்டது என்று கூறலாம். வெற்றி பெற்று வரும் தலைவனை வரவேற்கும் சொல் என்றும் பொருள் கொள்ளலாம்.

பாபிலோனில் அடிமைப்பட்டிருந்த யூதர்களுக்குப் பாரசீக மன்னனான சைரஸ் விடுதலை அளித்ததுபோல, இயேசுவும் உரோமையரிடமிருந்து அரசியல் விடுதலை அளிப்பார் என்றுதான் அநேக யூதர்கள் நினைத்தனர். எனவே, இயேசுவை எருசலேமில் இருந்து பவனியாக அழைத்து வந்து தெருநெடுகிலும், 'ஓசன்னா' பாடிய போது, மக்கள் அவரை ஒரு விடுதலை வீரராகக் கண்டனர். அவர்களுக்கு விடுதலைப் பெற்றுத்தரவல்ல வீராகவும், அவர் தாவீதின் அரச வழிமரபைச் சேர்ந்தவராகவும் ஏற்று அவரை வரவேற்றனர். இதனால். குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு அவருக்கு எதிர்கொண்டு போய், "ஓசன்னா! ஆண்டவரின் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! இஸ்ரயேலின்



அரசர் போற்றப்பெறுக!"என்று அவர்கள் முழங்கியதாக யோவான் நற்செய்தி கூறுகிறது (12:13) இங்கு, ஓசன்னா என்பது வாழ்த்துக்கூறும் அல்லது போற்றும் சொல்லாகப் பயன்படுத்துப்பட்டுள்ளது.

'எதிர்கொண்டுபோய்' எனும் சொற்றொடர் போரில் வெற்றி பெற்று நாடு திரும்பும் வீரர்களை வரவேற்கப் பயன்படுத்தப்படும் சொற்றொடர். எனவே, இயேசு எருசலேமுக்குள் நுழையும் போது, மக்கள் அவரை ஒரு வெற்றி வீரராகவே பாரத்தனர். எனவே, அவரை 'ஓசன்னா' பாடி வரவேற்றனர். இங்கே ஓசன்னா என்பது போற்றிப் புகழும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, பழைய ஏற்பாட்டுக்காலத்தில் , 'விடுதலை தாரும்' அல்லது வெற்றி தாரும்' எனும் பொருளில் பயன்படுத்தப்பட்ட 'ஓசன்னா', புதிய ஏற்பாட்டுக்காலத்தில், 'போற்றப்பெறுக அல்லது வாழ்த்தப்பெறுக' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது என்பதை நினைவில் கொள்வோம்.

ஒரு சொல் காலவோட்டத்தில் அது கொண்டிருக்கும் அர்த்தத்தில் மாற்றம் பெறுவது இயல்பு.

-ஆர்.கே.

# திருமணமும் கத்தோலிக்க திருஅவை சட்டமும்..

முன் பக்கத் தொடர்ச்சி..

தொடர்ந்து தம்பதியினர் ஒருவருக் கொருவர் இடையிலான அன்பின் காரணமாக குழந்தை பிறக்கிறது; திருமணத்தில் அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுகின்றனர்; இதனால் திருமணத்தில் கணவனும் மனைவியும் புனிதத்தன்மையைப் பெறுகின் றனர் என்றும். இதன்வழி, அவர்கள் குட்டித் திருஅவையை உருவாக்குகின்றனர் எனவும் அருள்தந்தை தோமினிக் எடுத்துரைத்தார்.

திருஅவையில் திருமணம் தொடர்பாக 110 சட்டங்கள் உள்ளன. அந்த சட்டங்களின்படி திருமுழுக்குப் பெற்ற ஆணும் பெண்ணும் திருஅவை திருமணச் சட்டத்திற்கு உட்பட்டு, திருமணம் செய்து கொள்ளும் போது அது அருளடையமாக மாறுகிறது; திருமணத்தால் மட்டுமே இவ்விருவரும் இந்த அருளடையாளத்தைப் பகிரந்துகொள்கின்றனர்; திருமுழுக்கு பெறாத ஒரு நபரோடு, திருமுழுக்குப் பெற்றவர் திருமணம் செய்து கொள்ளும் போது, அது அருளடையாளமாக கருதப்படாது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், கத்தோலிக்க நம்பிக்கையால் (விசுவாசம்) அல்ல, திருமுழுக்கு பெற்றதனால்தான் திருமணம் ஓர் அருளடையாளமாக மாறுகிறது என அருள்தந்தை தோமினிக் விளக்கினார்.

மலேசிய நாட்டின் திருமணச் சட்டப்படி, 1982-ம் ஆண்டு மார்ச் முதல் தேதிக்குப் முன்னர் ஆலயங்களில் நிறைவேற்றப்பட்ட திருமணச் சடங்குகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டன. ஆனால், அதன் பின்னர் ஆலயங்களில் திருமணம் செய்ய விரும்புவர்கள் (முஸ்லீம் அல்லாதவர்கள்) முதலில் அரசாங்கத்தில் பதிவு திருமணம் செய்து கொள்ள வேண்டும். நாட்டின் சட்டத்திற்குக் கீழ்படிந்தே, நமது ஆலயத்தில் திருமணம் நடைபெறுவதற்கு முன், சிவில் (அரசாங்க) பதிவு திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது நடைமுறைக்கு வந்தது என்றும், கத்தோலிக்க ஆலயத்தில் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் நடைபெறும் திருமணம், இஸ்ரயேல் மக்களோடு கடவுள் செய்து கொண்ட உடன்படிக்கைக்கு ஈடானது (இச.11:13-25) என அருட்திரு தோமினிக் தெளிவுறக் கூறினார்.
இதனால் கத்தோலிக்கத் திருஅவையில், மணமுறிவுக்கே இடமில்லை என்பதை உறுதிப்படுத்திய அருள்தந்தை, திருமணத்திற்கு முன்பே அல்லது தொடக்கத்திலேயே அந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ உடலுறவு கொள்வதில் மனோவியல் அல்லது உடல் ரீதியாக குறைபாடுகள் இருந்ததாக நிரூபிக்கப் பட்டால், அந்த திருமணம் செல்லத்தக்கது அல்ல (null and void) என அறிவிக்கப்படலாம். இது தவிர, கட்டாயத்தினால் அல்லது கடத்திச் சென்று திருமணம் செய்து கொண்டதாக நிரூபிக்கப்பட்டாலும், அந்த திருமணம் செல்லாது என திருஅவை அறிவிக்கலாம். ஆயினும் திருஅவையில் மணமுறிவுக்கு (divorce) இடமில்லை என்பதைத் தெளிவுப்படத்தினார். தவிர்க்க இயலாதச் சூழலில் தம்பதியர் திருஅவையின் திருமண வழக்குகள் சம்பந்தப்பட்ட வழக்குறைஞர் களின் ஆலோசனையை நாடலாம் என்று அறிவுறுத்துனார்.

ஆலயத்திற்கு வெளியே செய்யப்படும் திருமணங்களைத் திருஅவை அங்கீ கரித்தாலும், அவை அருளடைளமாகக் கருதப்படாது. அருளடையாளமாக கருதப்படுவதற்குரிய வழிமுறைகளைப் பின்பற்றி (convalidation) அதற்கான தனிச் சடங்கு நடைபெற வேண்டும். திருமணம் செய்யும் தம்பதிகள் முழு சுதந்திரத்தோடு வர வேண்டும். தங்களது வாக்குறுதிகளை மனமுவந்து தெரிவிக்க வேண்டும்; வாழ்நாள் முழுவதும் ஒருவருக்கொருவர் பிரமாணிக்கமாக இருக்கும் எண்ணம் இருக்க வேண்டும்; இறைவன் அருளும் குழந்தைகளை திருஅவைப் படிப்பினைக்கு ஏற்ப வளர்க்க வேண்டும் ஆகிய நிபந்தனைகைளப் பின்பற்றி, திருஅவை சட்டத்திற்கேற்ப திருமணம் நடைபெற வேண்டும் என்றும், திருமண உறவு திருஅவைக்கும் இயேசுவுக்குமான நிலையான உறவு என்றும் அருட்திரு தோமினிக் சந்தியாகு தெளிவுப்படுத்தினார்.

இறுதியாக, ஏற்பாட்டுக்குழுவின் சார்பின் சார்வில் இப்பயிலரங்கத்தை சிறப்பாக வழிநடத்திய அருள்தந்தை தோமினிக் சந்தியாகு, உடனிருந்து உதவிகரம் நீட்டிய ஆலோசகர் Msgr. ஹென்ரி ராஜூ அவர்களுக்கும், சிறப்பாக பங்கேற்ற அனைவருக்கும், இயங்கலை (online) வசதிக்கு உதவிய சகோ. செபஸ்தியன் பிள்ளை அவர்களுக்கும் ஏற்பாட்டுக்குழு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

*-அந்தோணி இன்னாசி*

# மடிந்து பலன்தரும் கோதுமைமணிகள் ஆவோம்!

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு முதல் வாசகத்தில் நம்பிக்கையூட்டும் மாபெரும் செய்தியை எரேமியா நூளிலிருந்து நமக்கு கடவுள் வெளிப்படுத்துகிறார். பழைய உடன்படிக்கையை புரம் தள்ளி புதிய உடன்படிக்கையின் வழியாக ஒவ்வொரு வரும் தம்மை அறிந்து கொள்ள தம் சட்டத்தை உள்ளத்தில் பதித்து அதனை இதயத்தில் எழுதிவைப்பேன் என கடவுள் தெறிவிக்கிறார்.

அதிலும் நம் பாவங்களை மன்னித்து அதனை நினைவுகூர மாட்டேன் எனவும் உறுதி கூருகிறார். மீட்புக்கான இவ்வுடன்படிக்கை எத்தகைய மகத்துவம் வாய்ந்ததாகும் என திருத்தூதர் பவுல் இரண்டாம் வாசகத்தில் எடுத்துரைக்கையில், கீழ்படிதலின் வழியாகத்தான் இத்தகைய மீட்பை நாம் அடைய இயலும் என்பதை தெளிவுபடுத்துகிறார். கிறிஸ்து கொண்டிருந்த இறைப்பற்று கலந்த அச்சத்தை நாமும் பின்பற்றி மனமுருகி கண்ணீர் சிந்தி, மன்றாடி வேண்டிடுமாறு நம்மை பணிக்கிறார்.

மடிந்து விளைச்சலாகும் தானியமான கோதுமை மணி என்று இயேசு தம்மை அழைப்பதை நற்செய்தியின் வழியாக வாசிக்கிறோம். பெத்சாயிதா ஊரை சேர்ந்த கிரேக்க மக்கள் சிலரிடம் தம் மரணத்தின் முன்னறிவிப்பை தெரிவிக்கும் இயேசு, யூதர் அல்லாத பிற மக்களுக்கும் மீட்பு உண்டு என்பதை தெளிவுபடுத்தும் வகையில்தான் 'நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் ஈர்த்துகொள்வேன்' என்று கூருகிறார்.

திருப்பாடுகளின் வெள்ளி இன்றி அனைவருக்குமான உயிர்ப்பின் ஞாயிறு இல்லை என்பது உறுதி. அவ்வாறே, பிறப்பை அடைந்த யாவரும் இறப்பை அடைவதும் உறுதி. எல்லா உயிர்க்கும் பிறப்பும் இறப்பும் இயற்கையானதே. ஆயினும் உலகத்தில் நிலைவாழ்வை நோக்கி நாம் பயணிக்கிறோம். ஒருநாள் இவ்வுலுகில் நமது பயணம் முடிவுரும் எனும் என்னமோ அச்சமோ இன்றி வாழ்ந்து வருகிறோம்.

இதனால் தான் திருத்தூதர் பவுல் இறைப்பற்று கலந்த அச்சத்தை நாம் கொண்டிருக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் வலிறுத்துகிறார். தானியங்களை போல நாம் மடிவது திண்ணம். எனினும் கீழ்படிதலின் வழி அளிக்கப்படும் புதிய உடன்படிக்கை வழியாக மீட்பை அடைந்து மடிந்தால், மாபெறும் விளைச்சலை கொடுக்கும் ஆற்றல் சாத்தியப்படும் என நற்செய்தி விளக்கம் அளிக்கிறது. கிறிஸ்துவின் மரணத்திற்கு பிறகு கிறிஸ்துவ நெறி உலகெங்கும் பரவியது இதற்கு சான்றாகும்.

வானுலகில் மட்டுமல்ல, பூவுலகிலும் கிறிஸ்து உயர்த்தப்பெற்றது மரணத்திற்க்கு பிறகுதான். மண்ணில் விழுந்து மடிந்து பிறருக்கு கனி தந்தவர் கிறிஸ்து. இத்தகைய தியாகத்தை வேறு எந்த செயலிலும் வெளிப்படுத்தியிருக்க முடியாது. அத்தகைய அன்பை கொண்டிருந்தும், இறைமகன் எனும் மாட்சியை கொண்டிருந்தும், தம் மரணத்தின் முன்னறிவிப்பை தெரிவிக்கும் வேளையில் கலக்கமுற்றார் இயேசு. தன் உலக வாழ்வின் குறிக்கோளை முன்னிருத்தி பின்வருமாறு கூருகிறார்

இயேசு சொல்லும் இரண்டாவது செய்தி "தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வை ஒரு பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்" என்பதாகும். இந்த உலகத்தில் இருக்கின்ற மண், மரம், செடி கொடிகள், மழை, உயிரினங்கள் இவையெல்லாமே ஒருபோதும் தமக்காக, வாழ்ந்ததுமில்லை,

ஆகையால், கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் இந்த வாழ்வை அர்த்தமுள்ளதாக்க நம்மையே முற்றிலுமாக இறைபணிக்காய், பிறர் பணிக்காய் தியாகம் செய்வோம், இப்படிப்பட்ட வாழ்வில் சவால்கள் வருகையில் அதனை இறைவனிடம் ஒப்புக் கொடுத்து இறைவேண்டல் செய்வோம். இறைவனுக்கு உகந்த வழியில் நடப்போம். அதன்வழியாக இறையருள் நிறைவாய் பெறுவோம்.

*-எட்மண் பல்தசார், செராஸ்*

**தவக்காலம் 5-ம் வாரம்**
எரே: 31: 31-34
திபா: 51: 1-2. 10-11. 12-13
எபி : 5: 7-9
யோவான் : 2: 20-33
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை : வாரம் I**